## பட்டு வளர்ச்சித்துறை

# 1. மல்பரி பரப்பு

**1.1 தமிழ்நாட்டில் பட்டுப்புழு வளர்ப்பிற்காக எவ்வளவு ஏக்கர் பரப்பில் மல்பரி (முசுக்கொட்டை) பயிரிடப்பட்டுள்ளது ?**

★ தமிழ்நாட்டில் 41625 ஏக்கர் பரப்பில் 26023 விவசாயிகளால் மல்பரி (முசுக்கொட்டை) பயிரிடப்பட்டுள்ளது.தற்போது, வறட்சி காரணமாக, இதில் 15448 ஏக்கர் மல்பரி பரப்பு பாதிப்படைந்துள்ளது.

# 2. வறட்சி பாதிப்பு

**2.1 வறட்சியால் தமிழகத்தில் எத்தனை பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் ?**

★ தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக **10,602** பட்டு விவசாயிகளின் **15,448** ஏக்கர் மல்பரி பரப்பு பாதிப்பு அடைந்துள்ளது.

**2.2 வறட்சியால் தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் அதிக அளவில் பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் ?**

★ தமிழகத்தில் கிருஷ்ணகிரி , தருமபுரி, நாமக்கல், சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான பட்டு விவசாயிகள் வறட்சியால் பாதிப்பு அடைந்துள்ளனர்.

★ பட்டுப்புழுவளர்ப்பு அதிக அளவில் மேற்கொள்ளப்படும் இந்த எட்டு மாவட்டங்களில் **11467** ஏக்கர் பரப்பிலான மல்பரி தோட்டங்கள் வறட்சியின் காரணமாக பாதிப்பு அடைந்துள்ளன. பட்டு விவசாயிகள் **8604** பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

## 2.3 மாவட்ட வாரியாக வறட்சியால் பாதிப்படைந்துள்ள மல்பரி பரப்பு விபரம் என்ன ?

★ மாவட்ட வாரியாக வறட்சியால் பாதிப்படைந்துள்ள மல்பரித் தோட்டப்பரப்பு மற்றும் பட்டு விவசாயிகள் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு :

| வரிசை எண் | மாவட்டம் | வறட்சியால் பாதிக்கப்பட்ட மல்பரி பரப்பு (ஏக்கரில்) | வறட்சியால் பாதிக்கப்பட்ட பட்டு விவசாயிகள் (எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 1 | அரியலூார் | 40.00 | 12 |
| 2 | சென்னை | | |
| 3 | கோயம்புத்தூர் | 524.55 | 404 |
| 4 | கடலூர் | 57.00 | 29 |
| 5 | தருமபுரி | 1830.00 | 2127 |
| 6 | திண்டுக்கல் | 736.25 | 332 |
| 7 | ஈரோடு | 1157.00 | 563 |
| 8 | காஞ்சிபுரம் | 5.00 | 3 |
| 9 | கன்னியாகுமரி | 31.95 | 29 |
| 10 | கரூர் | 216.58 | 114 |
| 11 | கிருஷ்ணகிரி | 4071.90 | 3077 |
| 12 | மதுரை | 182.50 | 82 |
| 13 | நாகபட்டினம் | 27.50 | 15 |
| 14 | நாமக்கல் | 1253.28 | 764 |
| 15 | பெரம்பலூர் | 60.00 | 23 |
| 16 | புதுக்கோட்டை | 240.00 | 109 |
| 17 | இராமநாதபுரம் | 42.00 | 23 |
| 18 | சேலம் | 1162.70 | 577 |
| 19 | சிவகஙகை | 32.00 | 20 |
| 20 | தஞ்சாவூர் | 150.00 | 77 |
| 21 | நீலகிரி | 29.00 | 28 |
| 22 | தேனி | 551.75 | 245 |
| 23 | திருவள்ளூர் | 25.00 | 25 |
| 24 | திருவண்ணாமலை | 149.35 | 157 |
| 25 | திருவாரூர் | 20.00 | 12 |
| 26 | திருநெல்வேலி | 597.00 | 199 |
| 27 | திருப்பூர் | 971.75 | 604 |

| | | | |
|---|---|---|---|
| 28 | திருச்சிராப்பள்ளி | 367.50 | 211 |
| 29 | தூத்துக்குடி | 45.00 | 18 |
| 30 | வேலூர் | 495.85 | 488 |
| 31 | விழுப்புரம் | 170.50 | 133 |
| 32 | விருதுநகர் | 205.00 | 102 |
| | **மொத்தம்** | **15447.90** | **10602** |

**2.4 தமிழகத்தில் தற்போது வறட்சியினால் மல்பரி சாகுபடி பரப்பு பாதிப்பு அடைந்துள்ளதா ?**

★ தமிழகத்தில் **2012–2013** ஆம் ஆண்டில் பருவமழை பொய்த்துப் போனதால், வறட்சியின் காரணமாக **15448** ஏக்கர் பரப்பிலான மல்பரித் தோட்டங்கள் பாதிப்படைந்துள்ளன. **10602** பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## 3. அரசு மானிய உதவிகள், மானிய உதவி நடைமுறைகள்

**3.1 பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயி ஒருவருக்கு அரசால் வழஙகப்படும் மானிய உதவிகள் யாவை ?**

| ★ மானிய விபரம் | ஒரு ஹெக்டேருக்கு ரூபாயில் | ஒரு ஏக்கருக்கு ரூபாயில் |
|---|---|---|
| ★ மல்பரி நடவு செய்ய மானியத் தொகை | 16,875.00 | 6750.00 |
| ★ தனியாக புழு வளர்ப்பு மனை அமைக்க | 1,00,000.00 | 1,00,000.00 |
| ★ பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய | 37,500.00 | 37,500.00 |
| ★ மல்பரி தோட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனம் நிறுவ | 50,000.00 | 20,000.00 |
| ★ பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி அளிக்க மானியம் | 5,000.00 | 5,000.00 |
| ★ மகளிர் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கான நலக்காப்பீடு | 782.00 | 782.00 |
| ★ பயிர் காப்பீட்டுத் திட்டம் | 326.70 | 326.70 |
| **ஒரு பயனாளிக்கு அதிக பட்ச மானியம்** | **2,10,483.70** | **1,70,358.70** |

**3.2 பட்டு வளர்ச்சித்துறையின் மூலம் மானிய உதவிகள் விவசாயிகளுக்கு எவ்வாறு வழங்கப்படுகிறது ?**

★ பட்டு வளர்ச்சித்துறை மத்திய பட்டு வாரிய பங்களிப்புடன் கூடிய கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் (Catalytic Development Programme).

1) மல்பரி நடவு மானியம்.
2) மல்பரி மர நடவுக்கான மானியம்.
3) தனி புழுவளர்ப்பு மனை கட்டுவதற்கான மானியம்.
4) பட்டு வளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்ய மானியம்.
5) சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க மானியம்.

போன்ற மானிய உதவிகளை விவசாயிகளுக்கு வழங்கிவருகிறது.

✪ விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானிய உதவிகள் விவசாயிகளுக்கு நேரடியாக ரொக்கமாக வழங்கப்படுவதில்லை. விவசாயிகளின் பெயரில் உள்ள வங்கி கணக்கிற்கு ECS (Electronic Clearing Solution) / RTGS ( Right Time Gross Settlement) / NEFT (National Electronic Fund Transfer) முறைகளில் மானியம் விடுவிக்கும் உதவி இயக்குநர் வங்கிக்கணக்கில் இருந்து வங்கிகள் மூலமே தொகை மாற்றம் செய்யப்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்/ மத்திய பட்டு வாரிய உயர் அலுவலர்கள் பங்கேற்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களில் விவசாயிகளுக்கு வங்கி காசோலைகள் மூலம் மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

**3.3 பட்டு விவசாயிகளுக்கு மல்பரி நடவு மானியம் வழங்கிட பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவை ?**

★ மல்பரி நடவு மானியம் பெற ஒரு விவசாயி குறைந்த பட்சம் **0.50** ஏக்கர் முதல் அதிக பட்சம் **2.50** ஏக்கர் வரை மல்பரி சாகுபடி செய்திருக்க வேண்டும். அவருக்குச் சொந்தமான நிலத்தில் மல்பரி சாகுபடி செய்திருப்பதற்கு வருவாய் துறையின் ஆதாரங்களான சிட்டா மற்றும் அடங்கல் பெற்று சம்பந்தப்பட்ட பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநருக்கு உரிய படிவத்தில் விண்ணப்பித்தால் மானிய உதவிகள் வழங்கப்படும். ஒரு ஏக்கர் மல்பரி நடவு பரப்பிற்கு ரூ.**6,750/–**

வீதம் அதிகபட்ச மானிய உதவியாக 2.50 ஏக்கருக்கு ரூ.16,875/– தொகை மல்பரி நடவு மானியமாக வழஙகப்படுகிறது.

**3.4 மல்பரி தோட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனம் நிறுவிய விவசாயிக்கு மானிய உதவிகள் வழஙகிட பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவை ?**

★ மல்பரி தோட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனம் நிறுவிட மானியம் பெற ஒரு விவசாயி, தனக்குச் சொந்தமான நிலத்தில் மல்பரி சாகுபடி செய்திருப்பதாக வருவாய்த் துறையின் ஆதாரஙகளான சிட்டா மற்றும் அடஙகல் பெற்று வழஙகிட வேண்டும். விவசாயி விரும்பும் அஙகீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து விலைப்பட்டியல் பெற்று சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க சம்மந்தப்பட்ட உதவி இயக்குநரால் பணி ஆணை வழஙகப்பட்டு பணி நிறைவேற்றப்படும். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.20,000/– வழஙகப்படுவதால் விவசாயி வருவாய்த் துறையினரிடமிருந்து சிறு / குறு விவசாயி சான்றிதழ் பெற்று வழஙகிட வேண்டும். பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமாக ரூ.15,000/– வழஙகப்படுகிறது. திட்ட உதவிகள் பெற்ற பின் மூன்று வருடஙகளுக்குச் குறையாமல் புழுவளர்ப்புக்கென மல்பரி தோட்டம் பராமரிக்கப்படும் என்ற உறுதிமொழியினைப் பிணையப் பத்திரத்தில் விவசாயி வழஙகிட வேண்டும். அதிக பட்சமாக ஒரு விவசாயிக்கு 2.50 ஏக்கர் பரப்பில் சொட்டு நீர்ப்பாசனம் நிறுவ மானிய உதவிகள் வழஙகப்படுகிறது.

**3.5 பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கட்ட விவசாயிகளுக்கு மானியம் வழஙகிட பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவை ?**

★ பட்டு வளர்ச்சித் துறையில் பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்டுவதற்கு மானியம் பெற ஒரு விவசாயி குறைந்தபட்சம் 1.00 ஏக்கர் மல்பரி சாகுபடி செய்திருக்க வேண்டும். அவருக்கு சொந்தமான நிலத்தில் மல்பரி சாகுபடி செய்திருப்பதற்கு வருவாய் துறையின் ஆதாரஙகளான சிட்டா மற்றும் அடஙகல் பெற்று வழஙக வேண்டும். புழுவளர்ப்பு குடில் கட்டி முடிக்கப்பட்டவுடன் பதிவு பெற்ற கட்டிட

பொறியாளரிடமிருந்து மதிப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் கட்டிட வரைபடம் பெற்று வழங்க வேண்டும். திட்ட உதவிகள் பெற்ற பின் மூன்று வருடஙகளுக்கு குறையாமல் புழுவளர்ப்புக்கென மல்பரி தோட்டம் பராமரிக்கப்படும் என்ற உறுதிமொழியினை பிணையப் பத்திரத்தில் விவசாயி வழஙக வேண்டும்.

1500 சதுர அடிக்கு மேல் புழுவளர்ப்பு குடில் பரப்பு இருப்பின் அதிக பட்ச மானிய உதவியாக ரூ.1,00,000/– தொகையும்,

1000 முதல் 1500 சதுர அடி வரை புழுவளர்ப்பு குடில் பரப்பு இருப்பின் அதிக பட்ச மானிய உதவியாக ரூ.75,000/– தொகையும்,

700 முதல் 1000 சதுர அடி வரை புழுவளர்ப்பு குடில் பரப்பு இருப்பின் அதிக பட்ச மானிய உதவியாக ரூ.37,500/– தொகையும் விவசாயிகளுக்கு வழஙகப்படுகிறது.

**3.6 மேம்படுத்தப்பட்ட பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடஙகள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழஙகிட பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவை ?**

★ பட்டு வளர்ச்சித்துறையின் மூலம் விவசாயிகளுக்கு புழுவளர்ப்புத் தளவாடஙகள் மற்றும் பண்ணைக் கருவிகள் ரூ.37,500/– மதிப்பில் கொள்முதல் செய்து வழஙகப்படும். பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடஙகளைப் பெறுவதற்கு, விவசாயி குறைந்தபட்சம் 1.00 ஏக்கர் மல்பரி சாகுபடி செய்திருக்க வேண்டும். தனக்குச் சொந்தமான நிலத்தில் மல்பரி சாகுபடி செய்திருப்பதற்கு வருவாய்த் துறை ஆவணஙகளான சிட்டா மற்றும் அடஙகல் பெற்று வழஙகிட வேண்டும். விவசாயி தமது பஙகாக ரூ.12,500/– மதிப்பீட்டில் புழுவளர்ப்புத் தாஙகிகளை தம் சொந்த செலவில் அமைத்து அதற்கான செலவின ரசீதுகளை வழஙகிட வேண்டும்.

**3.7 மாநிலத்தில் பட்டு நூற்பு அலகுகள் நிறுவுவதற்கு மானிய உதவிகள் வழஙகப்படுகின்றதா ?**

★ ஆம். பட்டு நூற்பு அலகுகள் நிறுவுவதற்கு அரசு மானிய உதவிகள் வழஙகிறது. விபரம் பின்வருமாறு

| அலகு | மானிய தொகை |
|---|---|
| பட்டு முறுக்கேற்றும் அலகு நிறுவுவதற்கு (400 கதிர்கள் கொண்டது) | ரூ.4,50,000/– வீதமும் |
| பலமுனை பட்டுநூற்பு அலகு நிறுவுவதற்கு (10 ஏனம் கொண்டது) | ரூ.750000/– வீதமும் |
| காட்டேஜ் பேசின் பட்டுநூற்பு அலகு நிறுவுவதற்கு (6 ஏனஙகள் கொண்டது) | ரூ.1,87,500/– வீதமும் |
| 50 கிகி திறன் கொண்ட வெப்பகாற்று உலர்த்தி கொள்முதல் செய்திட | ரூ.96,000/– வீதமும் |

மானிய உதவிகளாக வழஙகப்படுகிறது.

**3.8 தமிழ்நாட்டில் பட்டுப்புழு வளர்க்கும் விவசாயிகளுக்கு மானியத்துடன் கடன் வழஙக வேண்டிய அவசியம் உள்ளதா ?**

★ பட்டுப்புழு வளர்ப்பு செய்யும் விவசாயிகளுக்கு மல்பரி தோட்டஙகளில் சொட்டு நீர்ப்பாசன முறை அமைக்கவும், பட்டுப்புழு வளர்ப்புமனை கட்டவும், இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்கவும், பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடஙகள் கொள்முதல் செய்யவும் பட்டு வளர்ச்சித்துறையின் மூலம் அரசு மானியம் வழஙகப்படும்.

★ புழு வளர்ப்பு மனை கட்ட 50 சதவீதம் மாநில மற்றும் மத்திய அரசு மானியமாகவும், மீதமுள்ள 50 சதவீதம் பயனாளியின் பஙகாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ மேற்கூறிய பணிகளுக்காக வஙகிக்கடன் பெற விரும்பும் விவசாயிகளிடமிருந்து விண்ணப்பஙகள் பெற்று, மாவட்ட அளவிலான பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர்கள் மூலம் சம்மந்தப்பட்ட வஙகிகளுக்கு கடன் விண்ணப்பஙகள் பரிந்துரை செய்து தரப்படுகிறது. மாவட்ட அளவில் மாதந்தோறும் நடைபெறும் வஙகியாளர்கள் கூட்டத்தின் போது இந்த கடன் திட்ட செயல்பாடுகள் குறித்து திறனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

# 4. பட்டுப் புழு வளர்ப்பு

**4.1 பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட எவ்வளவு முதலீடு தேவைப்படுகிறது ?**

★ ஓர் ஏக்கரில் மல்பரி பயிரிட்டு பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட சுமார் ரூ.2,20,000/– கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்படுகிறது.

| | |
|---|---|
| மல்பரி தோட்டம் அமைக்க | ரூ. 30,000 /– |
| பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டிட | ரூ. 1,50,000 /– |
| பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்ய | ரூ. 40,000 /– |

**4.2 ஒரு ஏக்கர் மல்பரி தோட்டத்தில் ஓர் ஆண்டிற்கு எவ்வளவு பட்டு முட்டைகள் வளர்க்க முடியும் ?**

★ ஓர் ஏக்கருக்கு ஓர் ஆண்டில் சராசரியாக 800–1000 பட்டு முட்டைகள் வளர்ப்பு செய்யலாம்.

**4.3 பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் செய்வதன் மூலம் எவ்வளவு நிகர வருமானம் கிடைக்கும் ?**

★ ஓர் ஏக்கர் மல்பரி நடவு செய்து பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் செய்வதன் மூலம் ஓர் ஆண்டில் ரூ.1,00,000/– முதல் ரூ.1,50,000/– வரை வருமானம் கிடைக்கும். நிகர வருமானமாக ரூ.50,000/– முதல் ரூ.75,000/– வரை விவசாயிகள் பெறுகிறார்கள்.

**4.4 தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு சேவை செய்வதற்காக எத்தனை தொழில் நுட்ப சேவை மையங்கள் செயல்படுகின்றன ?**

★ 102 தொழில் நுட்ப சேவை மையங்களும், 3 விதைப்பகுதி தொழில் நுட்ப சேவை மையங்களும் செயல்படுகின்றன.

| வ. எண் | மண்டலம் | வ. எண் | உதவி இயக்குநர்களின் தலைமையிடம் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | தர்மபுரி | 1 | ஒசூர் | 7 |
| | | 2 | தேன்கனிகோட்டை | 6 |
| | | 3 | கிருஷ்ணகிரி | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 4 | தர்மபுரி | 4 |
| | | 5 | பென்னாகரம் | 6 |
| 2 | ஈரோடு | 6 | சேலம் | 7 |
| | | 7 | கோயம்புத்தூர் | 4 |
| | | 8 | உடுமலைப்பேட்டை | 5 |
| | | 9 | ஈரோடு | 7 |
| | | 10 | தாளவாடி | 3 |
| | | 11 | குன்னூர் | 1 |
| 3 | வேலூர் | 12 | வாணியம்பாடி | 8 |
| | | 13 | திருவண்ணாமலை | 6 |
| | | 14 | விழுப்புரம் | 4 |
| 4 | திருச்சி | 15 | திருச்சி | 8 |
| | | 16 | நாமக்கல் | 7 |
| 5 | மதுரை | 17 | திண்டுக்கல் | 6 |
| | | 18 | தேனி | 5 |
| | | 19 | தென்காசி | 7 |
| | | | **மொத்தம்** | **105** |

**4.5 பட்டு விவசாயிகளுக்கு பட்டு முட்டைகள் உற்பத்தி செய்து விநியோகிக்க எத்தனை வித்தகங்கள் உள்ளன ?**

★ 11 மாநில அரசு வித்தகஙகளும், 3 மத்திய அரசு வித்தகஙகளும் 6 தனியார் வித்தகஙகளும் தற்பொழுது தமிழ்நாட்டில் செயல்படுகின்றன.

**வித்தகஙகள்**

| வ. எண் | வித்தகத்தின் பெயர் | மாவட்டம் | உதவி இயக்குநர் |
|---|---|---|---|
| | **அரசு வித்தகஙகள்** | | |
| 1 | ஒசூர் | கிருஷ்ணகிரி | ஒசூர் (வித்தகம்) |
| 2 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி (வித்தகம்) |
| 3 | சோகத்தூர் | தருமபுரி | தருமபுரி |
| 4 | பென்னாகரம் | தருமபுரி | பென்னாகரம் |
| 5 | கோயமுத்தூர் | கோயமுத்தூர் | கோயமுத்தூர் |
| 6 | ஈரோடு | ஈரோடு | ஈரோடு |
| 7 | தாளவாடி | ஈரோடு | தாளவாடி |

| | | | |
|---|---|---|---|
| 8 | வாணியம்பாடி | வேலூர் | வாணியம்பாடி |
| 9 | திருச்சி | திருச்சி | திருச்சி |
| 10 | திண்டுக்கல் | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 11 | குற்றாலம் | திருநெல்வேலி | தென்காசி |

| | **தேசிய பட்டுமுட்டை உற்பத்தி நிறுவன வித்தகங்கள்** | | |
|---|---|---|---|
| 1 | ஒசூர் | கிருஷ்ணகிரி | மத்திய பட்டு வாரியம் |
| 2 | தர்மபுரி | தர்மபுரி | மத்திய பட்டு வாரியம் |
| 3 | திருப்பத்தூர் | வேலூர் | மத்திய பட்டு வாரியம் |

| | **தனியார் வித்தகங்கள்** | | |
|---|---|---|---|
| 1 | பாலக்கோடு (அம்மன்) | தர்மபுரி | பென்னாகரம் |
| 2 | காவேரிப்பட்டினம் (திரு.ஸ்ரீவேல்முருகன்) | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 3 | கிருஷ்ணகிரி (பூர்ணிமா) | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 4 | கிருஷ்ணகிரி (ஆர்.எஸ்.டி.சி) | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 5 | ஆலஙகாயம் ஸ்ரீவிநாயகா) | வேலூர் | வாணியம்பாடி |
| 6 | தர்மபுரி (ஸ்ரீசக்ரா) | தர்மபுரி | தர்மபுரி |

**4.6 ஓர் ஆண்டில் ஓர் ஏக்கர் மல்பரி பயிரிடுவதன் மூலம் எவ்வளவு பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்ய இயலும் ?**

★ சராசரியாக ஓர் ஆண்டில் ஒரு ஏக்கரில் 520 – 680 கிகி பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யலாம்.

**4.7 ஆண்டிற்கு எத்தனை முறை புழு வளர்ப்பு செய்யலாம் ?**

★ ஆண்டிற்கு சராசரியாக 5 – 6 தடவைகள் புழு வளர்ப்புகள் செய்யலாம். பட்டு முட்டைகளுக்கு பதில் இளம்புழுக்களைப் பெற்று வளர்ப்பதன் மூலம் ஓரிரு புழுவளர்ப்புகள் கூடுதலாக செய்யலாம். இளம்புழுக்களைப் பெற்று வளர்த்தல் மற்றும் மல்பரி தோட்டத்தினை இரு பகுதிகளாக பிரித்து புழு வளர்ப்பு

செய்கையில், உடுமலைப்பேட்டை பகுதி விவசாயிகள் போல வருடத்திற்கு 10 தடவைகள் புழு வளர்ப்புகள் மேற்கொள்ளலாம்.

**4.8 பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் எவ்வளவு நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது ?**

★ ஒரு ஏக்கர் மல்பரி சாகுபடி செய்து பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம் ஆண்டுக்கு 5 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அதாவது ஒரு ஏக்கரில் வருடத்திற்கு 300 வேலை நாட்கள் x 5 நபர்கள் = 1500 மனித நாட்கள் வேலை வாய்ப்பு உருவாக்கப்படுகிறது.

**4.9 மல்பரி பயிரிடும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் தொழில்நுட்ப ஆலோசனைகள் யாவை ?**

★ நடவுக்கு தேவையான மல்பரி நாற்றுகள் மற்றும் மல்பரி விதைக்குச்சி கிடைத்திட உதவுதல்,

- மண்பரிசோதனை செய்து நடவு செய்தல்,
- மல்பரி தோட்ட பராமரிப்பு,
- சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல்,
- பூச்சி மற்றும் நோய்த்தடுப்பு நிர்வாகம்
- மல்பரி தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் தழைகளைக் கொண்டு 3–4 மாதங்களில் புழுவளர்ப்பு துவக்கிடவும், அதுவரை ஊடு பயிர் செய்தல்,
- தனிபுழு வளர்ப்பு மனை கட்டுதல்,
- பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்தல்,
- கிருமி நீக்கம்,
- பட்டு முட்டைத் தொகுதிகள் வழங்குதல்,
- அடைகாத்தல், உணவளித்தல், இளம்புழு வளர்ப்பு, முதிர்புழு வளர்ப்பு
- தோலுரிப்பின் போது கவனம், நோய்த்தடுப்பு
- கூடு கட்டுதல் மற்றும் பட்டுக்கூடு விற்பனை.
    - ஆகிய தருணங்களில் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளை பட்டு வளர்ச்சித்துறை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

**4.10 2012–2013 ஆம் ஆண்டில் மல்பரி நடவு அபிவிருத்தித் திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது ?”**

★ தமிழகத்தில் 2012–2013 ஆம் ஆண்டில் பிப்ரவரி’2013 மாதம் வரை மல்பரி நடவு, 3425 பட்டு விவசாயிகளால் 5158.20 ஏக்கர் பரப்பில் கீழ்காணும் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| மாவட்டம் | மல்பரி நடவு (ஏக்கரில்) | நடவு செய்த பட்டு விவசாயிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| கிருஷ்ணகிரி | 805.75 | 582 |
| தருமபுரி | 461.55 | 408 |
| சேலம் | 336.55 | 258 |
| ஈரோடு | 487.00 | 273 |
| கோயம்புத்தூர் | 278.50 | 168 |
| திருப்பூர் | 579.00 | 321 |
| நீலகிரி | 5.00 | 5 |
| வேலூர் | 351.25 | 274 |
| காஞ்சிபுரம் | 11.50 | 9 |
| திருவள்ளுவர் | 12.00 | 7 |
| திருவண்ணாமலை | 133.75 | 135 |
| நாமக்கல் | 250.50 | 199 |
| கரூர் | 30.50 | 19 |
| திருச்சி | 137.00 | 70 |
| பெரம்பலூர் | 12.00 | 6 |
| அரியலூர் | 47.00 | 21 |
| புதுக்கோட்டை | 84.00 | 52 |
| திருவாரூர் | 18.50 | 9 |
| தஞ்சாவூர் | 34.00 | 21 |
| விழுப்புரம் | 100.50 | 82 |
| கடலூர் | 38.00 | 28 |
| மதுரை | 29.50 | 17 |
| தேனி | 147.00 | 80 |
| விருதுநகர் | 66.50 | 32 |
| இராமநாதபுரம் | 15.00 | 8 |
| சிவகஙகை | 44.00 | 27 |
| திண்டுக்கல் | 334.50 | 155 |
| திருநெல்வேலி | 210.25 | 104 |
| தூத்துக்குடி | 35.10 | 16 |
| கன்னியாகுமரி | 35.00 | 23 |
| நாகபட்டினம் | 27.50 | 16 |
| **மொத்தம்** | **5158.20** | **3425** |

மேற்காணும் விபரப்படி **2012–2013** ஆம் ஆண்டில் மல்பரி நடவு செய்து, தோட்டஙகளை நல்ல முறையில் பராமரித்து பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயிக்கு அரசால் வழஙகப்படும் நிதி உதவிகள் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ மல்பரி நடவு செய்ய மானியத் தொகை (ஒரு ஏக்கருக்கு) | ரூ. | 6,750.00 |
| ★ தனியாக புழு வளர்ப்பு மனை அமைக்க நிலை–1 | ரூ. | 1,00,000.00 |
| ★ பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடஙகள் கொள்முதல் செய்ய | ரூ. | 37,500.00 |
| ★ மல்பரி தோட்டத்தில் சொட்டு நீர்ப்பாசனம் நிறுவ (ஒரு ஏக்கருக்கு) | ரூ. | 20,000.00 |
| ★ பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி அளிக்க உதவித்தொகை | ரூ. | 5,000.00 |
| ★ பட்டு விவசாயிகள் உடல்நலக்காப்பீடு செய்ய பிரிமியம் | ரூ. | 782.00 |
| ★ பட்டுப்புழுக்களுக்கான காப்பீடு செய்ய பிரிமியம் | ரூ. | 326.70 |
| **ஒரு பயனாளிக்கு ஒரு ஏக்கருக்கு மொத்த மானியம்** | ரூ. | **1,70,358.70** |

**4.11 அ) சஙககிரி தொகுதி,சஙககிரியில் பட்டு புழு விற்பனை நிலையம்அமைக்க அரசு ஆவன செய்யுமா ?**

**ஆ) ஆம் எனில் எப்போது ?**

★ ஆம். சஙககிரி தொகுதியில் , பட்டு விவசாயிகள் வெற்றிகரமாக பட்டுக்கூடு அறுவடை செய்ய ஏதுவாக, இளம் பருவ பட்டுப் புழுக்கள் வளர்த்து விவசாயிகளுக்கு விநியோகிக்கும் இளம்புழு வளர்ப்பு மையஙகள் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

★ ஆ) சஙககிரி தொகுதி சஙககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம் கன்னந்தேரி கிராமத்தில் விவசாயி திரு, துரைசாமி என்பவர் “தினேஷ்பாபு தனியார் இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையம்” செயல்படுத்தி வருகிறார். இம்மையத்தின் மூலம் **2011–12** ஆம் ஆண்டில் **15,945** பட்டு முட்டைகள் வளர்ப்பு செய்து, ,இளம் பட்டுப்புழுக்களாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. **2012–13**ம் ஆண்டில் பிப்ரவரி’**2013** மாதம் வரை **6550** பட்டு முட்டைகள் வளர்த்து விவசாயிகளுக்கு இளம்புழுக்களாக விநியோகிக்கப்பட்டுள்ளது. சஙககிரி

பகுதியில் உள்ள பட்டு விவசாயிகள் தேவையான இளம் பட்டுப்புழுக்களை இம்மையம் மூலம் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

★ மேலும், சஙககிரியில் இருந்து 20 கிமீ துூரத்தில் உள்ள தொப்பக்காடு கிராமத்தில், 2011–12 ம் ஆண்டில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் சிறிய அளவிலான இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையம் திரு.நல்லாக்கவுண்டர் என்ற விவசாயியால் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது, இம்மையம் மூலம் மாதம் 500 பட்டு முட்டைத் தொகுதிகள் இளம்புழுக்களாக பட்டு விவசாயிகளக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**எழக்கூடிய துணை வினா :**

**1) சஙககிரிக்கு அருகாமையில் கூடுதலாக இளம் பட்டுப் புழுவளர்ப்பு மையஙகள் அமைக்க வாய்ப்புள்ளதா ?**

★ எடப்பாடி,தொப்பக்காடு, இருப்பாளி, கொஙகனாபுரம், குள்ளம்பட்டி ஆகிய பகுதிகளில் பட்டுவளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் தேவையை கருத்தில் கொண்டு, தொப்பக்காடு கிராமத்தில் கூடுதலாக தனியார் இளம் பட்டுப் புழுவளர்ப்பு மையம் ஒன்று , கிரியா ஊக்கி திட்டத்தின் கீழ் அரசு மானிய உதவியுடன் துவக்கி செயல்படுத்துவதற்கு திருமதி. மாதம்மாள் என்ற முன்னோடி பட்டு விவசாயி முன்வந்துள்ளார்.

★ 2012–13 ஆம் ஆண்டில் பிப்ரவரி’2013 மாதம் வரை 7445 பட்டு முட்டைகள் வளர்த்து இளம் புழுக்களாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

★ எனவே, சஙககிரி பகுதியில் மொத்தம் மூன்று இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையஙகள் செயல்பட்டு பட்டு விவசாயிகளுக்கு இளம் பட்டுப்புழுக்களை வளர்த்து விநியோகித்து வருகின்றன. இப் பட்டுப்புழு வளர்ப்பு மையஙகள் மூலம் விவசாயிகள் பயன் பெறுகின்றனர்.

**எழக்கூடிய துணை வினா :**

**2) இளம் பட்டுப் புழுவளர்ப்பு நிலையங்கள் அமைப்பதற்கு அரசு மானிய உதவிகள் வழங்குமா ?**

★ நடப்பு 2012–13 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 100 விவசாயிகள் சிறிய அளவிலான இளம் பருவ பட்டுப்புழுவளர்ப்பு மையங்கள் துவக்கி செயல்படுத்துவதற்குஅரசு மானிய உதவிகள் வழங்குகிறது. அதன்படி, சிறிய அளவிலான இளம்பருவ பட்டுப்புழுவளர்ப்பு நிலையம் அமைக்கத் தேவைப்படும் புழு வளர்ப்பு தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் மதிப்பீடு ரூ, 1,00,000/– தொகையில் மானிய உதவியாக 50ரூ (மையம் ஒன்றிற்கு ரூ,50,000/– வீதம்) அரசு வழங்குகிறது. மொத்த மானியத் தொகையில் மத்திய பட்டு வாரியத்தின் பங்கு 25% மற்றும் மாநில அரசின் பங்கு 25% ஆகும்.

**எழக்கூடிய துணை வினா :**

**3) தமிழ்நாட்டில் தற்போது இளம்பட்டுப்புழுவளர்ப்பு மையங்கள் எங்குசெயல்படுகின்றன?**

★ தமிழ் நாட்டில் கீழ்க்காணும் மாவட்டங்களில் இளம் பட்டுப்புழு வளர்ப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன . விபரம் பின்வருமாறு :

**<u>இளம்புழு வளர்ப்பு மையங்கள் :</u>**

| வ. எண் | **மாவட்டம்** | **உதவி இயக்குநரின் தலைமையிடம்** | **இளம்புழு வளர்ப்பு மையங்களின் பெயர்** | அரசு / தனியார்/ சிறிய அளவு |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | ஒசூர் | ஒசூர் (சுகுணா) | தனியார் |
| 2 | கிருஷ்ணகிரி | ஒசூர் | முதுகுறுக்கி (ஸ்ரீபைரேஸ்வர சுவாமி) | தனியார் |
| 3 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | ஊத்தங்கரை | அரசு |
| 4 | தருமபுரி | பென்னாகரம் | பாப்பாரப்பட்டி | அரசு |
| 5 | தருமபுரி | தருமபுரி | தருமபுரி | சிறிய அளவு |
| 6 | தருமபுரி | தருமபுரி | பாப்பிரெட்டிப்பட்டி | சிறிய அளவு |
| 7 | தருமபுரி | தருமபுரி | சோகத்தூர் | அரசு |
| 8 | சேலம் | சேலம் | சேலம் (கந்தசாமி) | தனியார் |
| 9 | சேலம் | சேலம் | கண்ணந்தேரி (தினேஷ்பாபு) | தனியார் |
| 10 | சேலம் | சேலம் | சேலம் | சிறிய அளவு |
| 11 | சேலம் | சேலம் | எடப்பாடி | சிறிய அளவு |
| 12 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | சிறிய அளவு |
| 13 | கோயம்புத்தூர் | உடுமலைப் பேட்டை | பொள்ளாச்சி | சிறிய அளவு |
| 14 | ஈரோடு | ஈரோடு | தகரப்பட்டி (நாச்சியார்) | தனியார் |
| 15 | ஈரோடு | ஈரோடு | ஈரோடு | தனியார் |

| வ. எ ண் | மாவட்டம் | உதவி இயக்குநரின் தலைமையிடம் | இளம்புழு வளர்ப்பு மையங்களின் பெயர் | அரசு / தனியார்/ சிறிய அளவு |
|---|---|---|---|---|
| 16 | ஈரோடு | ஈரோடு | சாவக்காட்டு பாளையம் (இளஙகோ பட்டுப் பண்ணை) | தனியார் |
| 17 | ஈரோடு | ஈரோடு | தண்ணீர் பந்தல் புதூர் (சஞ்சய்) | தனியார் |
| 18 | ஈரோடு | ஈரோடு | அத்தாணி (சேகர் பட்டுப்பண்ணை) | தனியார் |
| 19 | ஈரோடு | ஈரோடு | கூத்தாடி பாளையம் ( மோகன்) | தனியார் |
| 20 | ஈரோடு | ஈரோடு | பி.கே.வலசு (ஸ்ரீகுமரன்) | தனியார் |
| 21 | ஈரோடு | தாளவாடி | மக்கனாஙகோம்பை (ஐயப்பா) | தனியார் |
| 22 | ஈரோடு | தாளவாடி | ராமாபுரம் | அரசு |
| 23 | திருப்பூர் | உடுமலைப் பேட்டை | மானுபட்டி (அம்மன்) | தனியார் |
| 24 | திருப்பூர் | உடுமலைப் பேட்டை | மானுபட்டி (ஸ்ரீஅம்மன்) | தனியார் |
| 25 | வேலூர் | வாணியம்பாடி | திரியாலம் (அஜய்) | தனியார் |
| 26 | வேலூர் | வாணியம்பாடி | மின்னூர் | அரசு |
| 27 | வேலூர் | வாணியம்பாடி | விச்சந்தாஙகல் | அரசு |
| 28 | வேலூர் | திருவண்ணா மலை | புலியூர் | அரசு |
| 29 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | செட்டிதஙகல் (யோகலட்சுமி) | தனியார் |
| 30 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | நாடானூர் | அரசு |
| 31 | திருச்சி | திருச்சி | உப்பிலியாபுரம் | அரசு |
| 32 | திருச்சி | திருச்சி | மணிகண்டம் | அரசு |
| 33 | தஞ்சாவூர் | திருச்சி | நாஞ்சிக்கோட்டை | அரசு |
| 34 | புதுக்கோட்டை | திருச்சி | ஆலஙகுடி | சிறிய அளவு |
| 35 | புதுக்கோட்டை | திருச்சி | புதுக்கோட்டை | சிறிய அளவு |
| 36 | நாமக்கல் | நாமக்கல் | எம்.கட்டிப்பாளையம் (துஙகம்) | தனியார் |
| 37 | நாமக்கல் | நாமக்கல் | அலஙகாநத்தம் (கஙகா காவேரி) | தனியார் |
| 38 | திண்டுக்கல் | திண்டுக்கல் | வி.குரும்பபட்டி (இன்கம்) | தனியார் |
| 39 | திண்டுக்கல் | திண்டுக்கல் | தருமத்துப்பட்டி (ஓம்சக்தி) | தனியார் |
| 40 | திண்டுக்கல் | திண்டுக்கல் | நரிக்கல்பட்டி (அன்னை) | தனியார் |
| 41 | இராமநாதபுரம் | தேனி | பாண்டியூர் | அரசு |
| 42 | திருநெல்வேலி | தென்காசி | கடையநல்லூர் (குறிஞ்சி) | தனியார் |
| 43 | திருநெல்வேலி | தென்காசி | அடைக்கலப் பட்டிணம் | சிறிய அளவு |
| 44 | திருநெல்வேலி | தென்காசி | கடையநல்லூர் | சிறிய அளவு |
| 45 | திருநெல்வேலி | தென்காசி | திருநெல்வேலி (வி.எம்.சத்திரம்) | அரசு |
| 46 | விருதுநகர் | தென்காசி | செவலூர் | அரசு |
| 47 | விருதுநகர் | தென்காசி | ஸ்ரீவில்லிபுத்தூர் | அரசு |
| 48 | கன்னியாகுமரி | தென்காசி | நாகர்கோயில் (கோணம்) | அரசு |

**4.12 மானாமதுரை தொகுதியில் பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழிலை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா ? (ஆ) ஆம் எனில் எப்போது ?**

★ ஆம். மானாமதுரை உட்பட தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை விவசாயிகள் மேற்கொள்ள ஊக்குவித்து, அரசு உதவி வருகிறது.

★ சிவகஙகையைத் தலைமையிடமாகக் கொண்டு, பட்டுத் தொழில்நுட்ப சேவை மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சிவகஙகை பட்டு தொழில்நுட்ப சேவை மையத்தின் பொறுப்பு அலுவலராக பணியாற்றிவரும் ஒரு உதவி பட்டு ஆய்வாளர் மானாமதுரை பகுதியிலும் பட்டு விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

★ மேலும், சிவகஙகை மற்றும் காளையார்கோவில் சார் சரகஙகளில் பணியாற்றிவரும் இளநிலை பட்டு ஆய்வாளர்கள், மானாமதுரை பகுதியில் உள்ள விவசாயிகளை பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட ஊக்குவிக்கின்றனர். விவசாயிகள் மல்பரி சாகுபடி செய்வதற்கு தேவையான மல்பரி நாற்றுகள் / விதைக்குச்சிகள் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து மல்பரி தோட்டம் பராமரிப்பதற்கும், பட்டுப்புழு வளர்ப்பதற்கு தேவையான பட்டு முட்டைகள் / இளம் பட்டுப்புழுக்களைப் பெற்றுத் தந்தும், தொழில்நுட்ப ஆலோசனைகள் வழஙகி உதவி வருகின்றனர்.

★ ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு பட்டுப்புழு வளர்ப்பு குறித்த உயர் தொழில்நுட்பப் பயிற்சி ஓசூரில் உள்ள அரசு பட்டு பயிற்சி நிலையத்தில் வழஙகப்பட்டு வருகிறது. பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் வெற்றிகரமாக பட்டுக்கூடு அறுவடை செய்து, வருமானம் பெறுவதற்கு அரசு முனைப்புடன் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

★ மானாமதுரை ஒன்றியத்தில் சூரக்குளம், தஞ்சாக்கூர் கிராமஙகளில் உள்ள விவசாயிகள் தற்போது மல்பரி சாகுபடி செய்து பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

★ மேலும் மானாமதுரை வட்டம், திருப்புவனம் ஒன்றியத்தில், தேளி, கீழடி, கலியந்தூர், டி.கரிசல்குளம், செம்பூர், திருப்புவனம்புதூர் ஆகிய கிராமஙகளில்

பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட விருப்பமுள்ள விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

<u>**எழக்கூடிய துணை வினாக்கள்:**</u>

**அ) மானாமதுரை பகுதியில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட முன்வரும் விவசாயிகளுக்கு அரசு மானிய உதவிகள் வழஙகப்படுமா ?**

**ஆ) மானாமதுரை பகுதியில் பட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளை விற்பனை செய்வதற்கு பட்டுக்கூடு அஙகாடி உள்ளதா ?**

★ அ) தமிழகத்தில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் பட்டு விவசாயிகளுக்கு தமிழக அரசு மத்திய பட்டு வாரியத்துடன் இணைந்து மானிய உதவிகள் வழஙகி ஊக்குவித்து உதவுகிறது. <u>விபரம் வருமாறு</u>:

| வ.எண் | திட்ட விபரம் | அரசு மானிய உதவி (ரூ) |
|---|---|---|
| 1 | மல்பரி நடவு செய்ய மானியத்தொகை (ஒரு ஏக்கருக்கு) | **6750.00** |
| 2 | தனியாக பட்டுப்புழு வளர்ப்புமனை கட்டுவதற்கு **(1500 சதுர அடிக்கு மேல் –நிலை–1)** | **1,00,000.00** |
| 3 | பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடஙகள் கொள்முதல் செய்ய | **37,500.00** |
| 4 | மல்பரித் தோட்டத்தில் சொட்டுநீர்ப்பாசனம் நிறுவுவதற்கு (ஒரு ஏக்கருக்கு –சிறு குறு விவசாயிகளுக்கு) | **20,000.00** |
| 5 | பட்டுப்புழு வளர்ப்பில் பயிற்சி அளிக்க உதவித்தொகை | **5,000.00** |
| 6 | பட்டு விவசாயிகள் உடல்நலக் காப்பீடு செய்ய பிரீமியம் | **782.00** |
| 7 | பட்டுப்புழு வளர்ப்பில் காப்பீடு செய்ய பிரீமியம் | **326.70** |
|  | **ஒரு பயனாளிக்கு ஒரு ஏக்கருக்கு மொத்த மானிய உதவி** | **1,70,358.70** |

★ மானாமதுரை தொகுதியில் மல்பரித் தோட்டம் அமைத்து, பட்டுப்புழு வளர்ப்பு செய்ய முன்வரும் விவசாயிகளுக்கும் மேற்காணும் அரசு மானிய உதவிகள் வழஙகப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

★ சிவகஙகையில் அரசு பட்டுக்கூடு அஙகாடி செயல்பட்டு வருகிறது. மானாமதுரை பகுதியில் உள்ள பட்டு விவசாயிகள், தாஙகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளை அருகாமையில் உள்ள சிவகஙகை அரசு பட்டுக்கூடு அஙகாடியில் விற்பனை செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 5. பட்டுக்கூடு மற்றும் பட்டு நூல் வர்த்தகம்

**5.1 பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை விற்பனை செய்ய தமிழ்நாட்டில் எத்தனை பட்டுக்கூடு அஙகாடிகள் உள்ளன ?**

★ 19 அரசு பட்டுக்கூடு அஙகாடிகள் உள்ளன.

**அரசு பட்டுக்கூடு அஙகாடிகள் :**

| வ எண். | அரசு பட்டுக்கூடு அஙகாடிகள் அமைவிடம் | மாவட்டம் | உதவி இயக்குநர் |
|---|---|---|---|
| 1 | ஓசூர் | கிருஷ்ணகிரி | ஓசூர் |
| 2 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 3 | தர்மபுரி | தர்மபுரி | தர்மபுரி |
| 4 | பென்னாகரம், பாலக்கோடு | தர்மபுரி | பென்னாகரம் |
| 5 | சேலம் | சேலம் | சேலம் |
| 6 | ஈரோடு | ஈரோடு | ஈரோடு |
| 7 | தாளவாடி | ஈரோடு | தாளவாடி |
| 8 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 9 | வாணியம்பாடி | வேலூர் | வாணியம்பாடி |
| 10 | திருச்சி | திருச்சி | திருச்சி |
| 11 | திண்டுக்கல் | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 12 | தேனி | தேனி | தேனி |
| 13 | ஸ்ரீவில்லிபுத்தூர் | விருதுநகர் | தென்காசி |
| 14 | நன்னகரம் | திருநெல்வேலி | தென்காசி |
| 15 | உடுமலைப்பேட்டை | திருப்பூர் | உடுமலைப்பேட்டை |
| 16 | பழனி(@) சி.கே.புதூர் | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 17 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | திருச்சி |
| 18 | சிவகஙகை | சிவகஙகை | திண்டுக்கல் |
| 19 | நாகர்கோவில் | கன்னியாகுமரி | தென்காசி |

**5.2 பிற மாநிலஙகளுக்கு பட்டுக்கூடுகள் விற்பனைக்கு எடுத்து செல்லப்படுவதை தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது ?**

★ மத்திய பட்டு வாரியத்தின் (ஜவுளித்துறை, இந்திய அரசு) தற்போதைய ‘விதை சட்டஙகளின்படி , பட்டுக்கூடுகள் மற்றும் பட்டுநூல் எஙகு வேண்டுமானாலும் வியாபாரம் செய்யப்படலாம்.

★ எனினும் தமிழ்நாட்டில் பட்டு நூற்புத்திறனை அதிகரிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் பட்டுக்கூடுகள் பிற மாநிலஙகளுக்கு எடுத்து செல்லப்படுவது குறையும்.

1) புதிய பட்டு நூற்பு அலகுகள் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன.
2) செயல்படாமலுள்ள நூற்பு அலகுகள் மீண்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
3) தற்போதுள்ள பட்டு நூற்பு அலகுகளின் உற்பத்தி திறன் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

**5.3 உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளை வர்த்தகம் செய்ய பட்டுக்கூடு அஙகாடிகளுக்கு பட்டுக்கூடுகளை பேருந்துகளில் இலவசமாக எடுத்துச்செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளதா ?**

★ தற்போது பட்டுக்கூடுகளை பேருந்துகளில் இலவசமாக எடுத்துச் செல்லமுடியாது. 25 கி.கி. பட்டுக்கூடுகளுக்கு மேல் அதிக எடையுள்ள மூட்டை ஒன்றுக்கு ஒரே ஒரு லக்கேஜ் (ஒரு டிக்கட் மதிப்பு) மட்டும் கட்டணமாகக் கொடுத்து மாநில அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் எடுத்துச் சென்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**5.4 விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளுக்கு லாபகரமான விலை கிடைக்கிறதா ?**

★ தற்போது பட்டுக்கூடுகளுக்கு லாபகரமான விலை கிடைக்கிறது நடப்பு 2012–2013ம் ஆண்டில் (பிப்ரவரி–2013 மாதம் வரை) கலப்பின பட்டுக்கூடுகளுக்கு சராசரியாக கிலோவுக்கு ரூ.224/– விலையும், வெண்பட்டுக் கூடுகளுக்கு சராசரியாக கிலோவுக்கு ரூ.303/– விலையும் விவசாயிகளுக்கு கிடைக்கிறது.

★ எனினும் சில சமயங்களில் மத்திய அரசின் கச்சாப்பட்டு ஏற்றுமதி/ இறக்குமதி கொள்கை, கலால் வரி விதிப்புமுறைகளில் மாற்றஙகள் மற்றும் கச்சாப்பட்டு தேவை ஆகிய காரணஙகளால் கச்சாப்பட்டின் விலையில் ஏற்ற, இறக்கம் ஏற்படுகிறது. இதனால் பட்டுக்கூடுகளின் விலையில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகிறது.

**5.5 நெல், கரும்பு, கோதுமை போன்ற விவசாய விளைபொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதைப்போல், பட்டுக்கூடுகளுக்கும் ஏன் நிர்ணயம் செய்யக்கூடாது ?**

★ குறைந்த பட்ச ஆதரவு விலை மத்திய அரசினால் நிர்ணயிக்கப்படுகிறது. அதைப்போல் பட்டுக்கூடுகளுக்கும் குறைந்த பட்ச ஆதரவு விலை நிர்ணயிக்க கோரும் பிரேரணை, மாநில அரசின் பரிந்துரைகளுடன் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அப்பிரேரணை மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**5.6 தமிழ்நாட்டில் பட்டுக் கொள்முதல் நிலையஙகள் எவ்வளவு உள்ளது ? அதன் விபரம் தெரிவிக்கவும்.**

★ அ) தமிழ்நாட்டில் பட்டுக்கூடுகள் கொள்முதல் மையஙகள் கலப்பினம் 19–ம், விதைக் கூடு கொள்முதல் மையஙகள் 3–ம் உள்ளன. மாவட்ட வாரியாக விபரஙகள் வருமாறு :–

**<u>அ.1) கலப்பினம்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | அரசு பட்டுக்கூடு அஙகாடி | ஒசூர் | கிருட்டிணகிரி மாவட்டம் |
| 2 | அரசு பட்டுக்கூடு அஙகாடி | கிருட்டிணகிரி | கிருட்டிணகிரி மாவட்டம் |
| 3 | அரசு பட்டுக்கூடு அஙகாடி | தருமபுரி | தருமபுரி மாவட்டம் |
| 4 | அரசு பட்டுக்கூடு அஙகாடி | பென்னாகரம் | தருமபுரி மாவட்டம் |
| 5 | அரசு பட்டுக்கூடு அஙகாடி | சேலம் | சேலம் மாவட்டம் |
| 6 | அரசு பட்டுக்கூடு அஙகாடி | கோவை | கோவை மாவட்டம் |
| 7 | அரசு பட்டுக்கூடு அஙகாடி | உடுமலைப்பேட்டை | திருப்பூர் மாவட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 8 | அரசு பட்டுக்கூடு அங்காடி | ஈரோடு | ஈரோடு மாவட்டம் |
| 9 | அரசு பட்டுக்கூடு அங்காடி | தாளவாடி | ஈரோடு மாவட்டம் |
| 10 | அரசு பட்டுக்கூடு அங்காடி | வாணியம்பாடி | வேலூர் மாவட்டம் |
| 11 | அரசு பட்டுக்கூடு அங்காடி | திருவண்ணாமலை | திருவண்ணாமலை மாவட்டம் |
| 12 | அரசு பட்டுக்கூடு அங்காடி | திருச்சி | திருச்சி மாவட்டம் |
| 13 | அரசு பட்டுக்கூடு அங்காடி | புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம் |
| 14 | அரசு பட்டுக்கூடு அங்காடி | திண்டுக்கல் (இருப்பு பழனி) | திண்டுக்கல் மாவட்டம் |
| 15 | அரசு பட்டுக்கூடு அங்காடி | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம் |
| 16 | அரசு பட்டுக்கூடு அங்காடி | தேனி | தேனி மாவட்டம் |
| 17 | அரசு பட்டுக்கூடு அங்காடி | நன்னகரம் (தென்காசி) | திருநெல்வேலி மாவட்டம் |
| 18 | அரசு பட்டுக்கூடு அங்காடி | ஸ்ரீவில்லிபுத்தூர் | விருதுநகர் மாவட்டம் |
| 19 | அரசு பட்டுக்கூடு அங்காடி | நாகர்கோவில் | கன்னியாகுமரி மாவட்டம் |

**அ. 2) விதைக்கூடு கொள்முதல் மையங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | அயலின விதைக்கூடு அங்காடி | ஒசூர் | கிருட்டிணகிரி மாவட்டம் |
| 2 | அயலின விதைக்கூடு அங்காடி | கோவை | கோவை மாவட்டம் |
| 3 | உள்நாட்டின விதைக்கூடு அங்காடி | தேன்கனிக்கோட்டை | கிருட்டிணகிரி மாவட்டம் |

**ஆ)** கச்சா பட்டு நூல் கொள்முதல் செய்ய அண்ணாபட்டு பரிமாற்றகம் காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வருகிறது.

**இ)** முறுக்கிய பட்டு கொள்முதல் மையம் காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் 6 கிளை மையங்களுடன் செயல்பட்டு வருகிறது.

**கிளை மையங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | டான்சில்க் கிளை மையம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2 | டான்சில்க் கிளை மையம் | சேலம் | சேலம் மாவட்டம் |
| 3 | டான்சில்க் கிளை மையம் | கும்பகோணம் | தஞ்சாவூர் மாவட்டம் |
| 4 | டான்சில்க் கிளை மையம் | ஆரணி | திருவண்ணாமலை மாவட்டம் |
| 5 | டான்சில்க் கிளை மையம் | ஈரோடு | ஈரோடு மாவட்டம் |
| 6 | டான்சில்க் கிளை மையம் | கோவை | கோவை மாவட்டம் |

**5.7 (அ) "தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு பட்டுகூடுகள் விற்பனையில் நியாயமான விலை கிடைக்க அரசு ஆவன செய்யுமா ? (ஆ) ஆம் எனில் விபரம் என்ன ?**

★ அ) ஆம். தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு, பட்டுக்கூடுகள் விற்பனையில் நியாயமான விலை கிடைக்க அரசு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

★ ஆ) தமிழ் நாட்டில் பட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளை விற்பனை செய்வதற்கு 19 இடஙகளில் அரசு பட்டுக்கூடு அஙகாடிகள் செயல்பட்டு வருகிறது. பட்டுக்கூடு அஙகாடி அலுவலர் விவசாயிகள் விற்பனைக்கு எடுத்து வரும் பட்டுக்கூடுகளின் தரம் குறித்த பரிசோதனைகள் செய்து, பெறப்படும் பட்டு நூலின் அளவை (Shell Ratio) கண்டறிந்து அடிப்படை விலை நிர்ணயம் செய்கிறார்.

★ பட்டுநூல் உற்பத்தி செய்யும் பட்டுநூற்பாளர்கள், அஙகாடியில் அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்ட பட்டுக்கூடுகளை பகிரஙக ஏல முறையில் கொள்முதல் செய்கின்றனர். பட்டுக்கூடுகளுக்குரிய தொகையினை பட்டுநூற்பாளர்களிடம் இருந்து பெற்று விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்வதற்கு அஙகாடி அலுவலர் உடனடி நடவடிக்கை மேற்கொள்கிறார். இவ்வாறு பட்டு விவசாயிகளுக்கு பட்டுக்கூடு விற்பனையில் நியாயமான விலை கிடைக்கச் செய்யப்படுகிறது.

# <u>6. சமூக பாதுகாப்புத் திட்டஙகள்</u>

**6.1 பட்டு வளர்ச்சித்துறையின் மூலமாக விவசாயிகளுக்கு செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்புத் திட்டஙகள் யாவை ?**

**மருத்துவ காப்பீட்டுத் திட்டம் மற்றும் பட்டு புழுவளர்ப்பு காப்பீட்டு திட்டம்.**

★ **<u>மருத்துவ காப்பீட்டுத் திட்டம் :</u>** பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் மற்றும் தொழிலாளர்களுக்கான மருத்துவக் காப்பீட்டு திட்டம் "ICICI Lombard" நிறுவனம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிர் பட்டு விவசாயி / பட்டுத்தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் தொழிலாளர், அவரது கணவர் மற்றும் இரண்டு குழந்தைகள் மருத்துவ காப்பீடு வசதி பெறுகின்றனர். இதற்கான பிரீமிய தொகை ரூ.781.18 வீதம் அரசு வழஙகுகிறது. (மத்திய பட்டு வாரியத்தின் பஙகு ரூ.639.53 & தமிழக அரசின் பஙகு ரூ.141.65 ஆகும்)

மொத்தம் 20000 மகளிர் பட்டு விவசாயிகள் மற்றும் அவர் தம் குடும்பத்தினர் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்றனர். ஒரு குடும்பத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.20000/– க்கு மிகாமல் மருத்துவ சிகிச்சை புற நோயாளியாகவோ, உள்நோயாளியாகவோ, இக்காப்பீட்டு திட்டத்தின் மூலம் பெறலாம்.

★ <u>**பட்டுப்புழுவளர்ப்பு காப்பீட்டுத் திட்டம் :**</u> பட்டுப்புழு வளர்ப்பு காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 10000 பட்டு விவசாயிகள் பயன்பெறுகிறார்கள். நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் காப்பீட்டு நிறுவனம் மூலமாக பட்டுப்புழு வளர்ப்பு காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

★ ஒரு விவசாயிக்கு காப்பீட்டு பிரிமீயத் தொகை ரூ.363/– ஆகும். இதில் மத்திய பட்டு வாரியம் ரூ.181.50 தொகையும், தமிழக அரசு ரூ.145.20 தொகையும் வழங்குகிறது. மொத்தம் ரூ.326.70 மானிய உதவியாக ஒரு விவசாயிக்கு வழங்கப்படுகிறது.

★ காப்பீடு விபரம் – 1) விவசாயி மேற்கொள்ளும் பட்டுப்புழு வளர்ப்பு கூடுகட்டும் பருவத்தில் சேதமடையும் போது, 100 கலப்பின பட்டு முட்டைகளுக்கு ரூ.4700/– தொகையும், 100 வெண்பட்டு முட்டைகளுக்கு ரூ.5787/– தொகையும் இழப்பீடாக பெறுகிறார். 2) இயற்கை சீற்றங்களால் புழுவளர்ப்பு மனை சேதமடையும் போது ரூ.50000/– தொகை வரை விவசாயி இழப்பீடாக பெறுகிறார். 3) தனி நபர் விபத்து காப்பீடாக ரூ.50000/– தொகை வரை வழங்கப்படுகிறது.

**6.2 பட்டுப்புழு வளர்ப்பிற்கு காப்பீடு வசதி ஏதும் உண்டா ?**

★ விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பிற்கு காப்பீடு செய்து கொள்ள சேலம் தி நியூ இன்டியா அஸ்யூரன்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஒரு விவசாயிக்கு மொத்த காப்பீடு பிரிமியத்தொகை ரூ.363/– ஆகும். இதில் செலவினத்தில் மத்திய பட்டு வாரியம் ரூபாய் 181.50 லட்சமும், தமிழக அரசு ரூபாய் 145.20 ஆக மொத்தம் ரூ.326.70 மானிய உதவியாக வழங்கப்படுகிறது. பட்டுப்புழுவளர்ப்பு காப்பீடுடன் விவசாயிகள், புழுவளர்ப்பு மனை , மற்றும் தனி நபர் விபத்துக் காப்பீடு வசதியும் பெறுகின்றனர்.

# 7. பட்டு வளர்ப்பு பயிற்சி

**7.1 ஒசூரில் அமைந்துள்ள தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு பட்டு வளர்ப்பு பற்றிய பயிற்சி வழங்கப்பட்ட விபரம் ?**

★ தமிழகத்தில் மல்பரி நடவு செய்துள்ள பட்டு விவசாயிகளுக்கு கட்டுக்கோப்பான மல்பரி சாகுபடி முறைகள் மற்றும் நவீன பட்டு புழுவளர்ப்பு தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி ஒசூரில் அமைந்துள்ள தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் வழங்கப்படுகிறது. தவிரவும் முன்னோடி பட்டு விவசாயிகளின் மல்பரி தோட்டங்களுக்கு அழைத்துச் சென்று கண்டுணர்வு பயிற்சியும் விவசாயிகள் பெறுகிறார்கள். கடந்த சில ஆண்டுகளில் பயிற்சி பெற்றோர் விபரம் பின்வருமாறு :

| திட்ட விவரம் | 2009–10 | 2010–11 | 2011–12 | 2012–13 (பிப்ரவரி' 2013 முடிய) |
|---|---|---|---|---|
| தொகுப்பு மேம்பாட்டு திட்டம் | - | 500 | 375 | - |
| கிரியா ஊக்கித் திட்டம் | 363 | 1237 | 1567 | 1925 |
| இதர பயிற்சிகள் | 300 | 244 | 97 | 43 |
| **மொத்தம்** | **663** | **1981** | **2039** | **1764** |

**7.2 பட்டு விவசாயிகளின் நலனுக்காக பட்டு வளர்ச்சித் துறையால் நடத்தப்படும் பயிற்சித்திட்டங்கள் யாவை ?**

★ மல்பரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் அவற்றில் கடைப்பிடிக்க வேண்டிய நவீன தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி வகுப்புகள் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் விவசாயிகள் பயிற்சி மையங்கள், செயல் விளக்க பயிற்சி மையங்கள் முதலிய அரசு பட்டுப்பண்ணைகளில் நடத்தப்படுகின்றன.

★ மேலும், விவசாயிகளுக்கு விடுதியில் தங்கி பயிற்சி பெறும் வகையிலான வகுப்புகள் ஒசூரில் அமைந்துள்ள 'தமிழ்நாடு பட்டு பயிற்சி நிலைய'த்தில் நடத்தப்படுகின்றன.

★ மல்பரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் நவீன தொழில் நுட்பங்கள் குறித்து மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மூலம் மாவட்ட / வட்ட அளவிலான விழிப்புணர்வு கூட்டங்கள் வாயிலாகவும் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

# 8. பட்டு நூற்பு மற்றும் பட்டு நூல் உற்பத்தி

**8.1 தமிழ்நாட்டில் பட்டுக்கூடுகளிலிருந்து பட்டு நூல் உற்பத்தி செய்யும் பட்டு நூற்பு அலகுகள் எத்தனை உள்ளன ?**

★ 1,305 ஏனங்களைக் கொண்டு மொத்தம் 202 பட்டு நூற்பு அலகுகள் கீழ்க்கண்டவாறு நிறுவப்பட்டுள்ளன.

| | **நூற்பு அலகின் வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** | **ஏனங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | சர்க்கா | 42 அலகுகள் | 88 ஏனங்கள் |
| 2 | காட்டேஜ் பேசின் | 130 அலகுகள் | 907 ஏனங்கள் |
| 3 | பலமுனை பேசின் | 29 அலகுகள் | 270 ஏனங்கள் |
| 4 | தானியங்கி பட்டுநூற்பாலை | 1 அலகுகள் | 40 ஏனங்கள் |
| | **மொத்தம்** | **202 அலகுகள்** | **1,305 ஏனங்கள்** |

**8.2 தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகள் முழுவதும் இங்கேயே நூற்பு செய்யப்படுகிறதா ?**

★ தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளில் 25 சதவீத பட்டுக்கூடுகள் மட்டுமே தமிழ்நாட்டு பட்டு நூற்பாளர்களால் கொள்முதல் செய்யப்பட்டு பட்டு நூற்பு செய்யப்படுகிறது. மீதமுள்ள பட்டுக்கூடுகள் அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் ஆந்திரப்பிரதேச பட்டுக்கூடு அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகிறது.

**8.3 ஓர் ஆண்டிற்கு எவ்வளவு கச்சாப்பட்டு தமிழ்நாட்டிற்கு தேவைப்படும் ?**

★ தமிழ்நாட்டிற்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 3,000 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு தேவைப்படுகிறது.

**8.4 தமிழ்நாட்டில் தற்பொழுது எவ்வளவு கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது ?**

★ தமிழ்நாட்டில் தற்பொழுது ஆண்டு ஒன்றுக்கு சுமார் 1,400 மெட்ரிக் டன் அளவிற்கு கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. மீதமுள்ள 1600 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு கர்நாடகா மாநிலத்திலிருந்தும், மற்றும் சீனா நாட்டிலிருந்தும் இறக்குமதி மூலம் பெறப்படுகிறது.

**8.5 தமிழ்நாட்டில் எவ்வளவு வெண்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது ?**

★ தமிழ்நாட்டில் ஆண்டிற்கு சுமார் 592 மெட்ரிக் டன் வெண்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இது தமிழகத்தின் மொத்த கச்சாப்பட்டு உற்பத்தியில் சுமார் 42 சதவீதமாகும். தமிழ்நாடு தேசீய அளவில் வெண்பட்டு உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.

**8.6 காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணா பட்டுப் பரிமாற்றகத்தில் எவ்வளவு பட்டு நூல் வர்த்தகம் செய்யப்படுகிறது ?**

★ கடந்த ஆண்டில் (2011–12) ஒரு மாதத்திற்கு 9 – 10 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு நூல் வர்த்தகம் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் செய்யப்பட்டது. நடப்பு 2012–2013 ஆம் ஆண்டில் ஒரு மாதத்திற்கு 6–7 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு நூல் வர்த்தகம் செய்யப்படுகிறது.

**8.7 காஞ்சிபுரத்தில் உள்ள டான்சில்க் இணையம் மூலம் எவ்வளவு பட்டு வர்த்தகம் செய்யப்படுகிறது ?**

★ ஒரு மாதத்திற்கு 12 – 13 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு நூல்
மற்றும் 13 மெட்ரிக் டன் முறுக்கேற்றிய பட்டுநூல்.

**8.8 தமிழ்நாட்டில் எங்கு அதிக அளவில் பட்டு நெசவு செய்யப்படுகிறது ?**

★ காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம், கோவை போன்ற பகுதிகளில் அதிக அளவில் பட்டு நெசவு செய்யப்படுகிறது.

**8.9 பட்டு வளர்ச்சித்துறை மூலம் பட்டு நெசவாளர்களுக்கு உதவியளிக்கும் திட்டம் ஏதும் செயல்படுத்தப்படுகிறதா ?**

★ பட்டு நெசவாளர்கள் தற்போது பயன்படுத்தும் கைத்தறிகளில் தொழில்நுட்ப மேம்பாடு செய்து, அவர்தம் பணி பளுவினை குறைக்கவும், நெசவுத் தொழிலில் பட்டு நூல் பயன்பாடு அளவை அதிகரித்து கூடுதல் உற்பத்தி மற்றும் வருவாய் ஈட்டவும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 6000 பட்டுத்தறிகள் ஜக்கார்டு மற்றும் பிற உபகரணங்கள் வழங்கி மேம்படுத்தப்பட்டு

வருகிறது. தறி ஒன்றினை மேம்படுத்திடரூபாய் 10,000 வீதம் அரசு மானிய உதவி வழுங்குகிறது. இப்பணி மத்திய பட்டு வாரியத்தின் மூலம் கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகிறது.

**8.10 தமிழகத்தில் தானியங்கி பட்டு நூற்பகம் எத்தனை இயங்கி வருகிறது ?**

★ பதினோறாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழகத்திற்கு மூன்று தானியங்கி பட்டு நூற்பகங்கள் நிறுவிட ஒப்பளிப்பு பெறப்பட்டு ஈரோடு மாவட்டத்தில் என்.கொண்டயம்பாளையம் என்ற இடத்தில் ஒன்றும், திருப்பூர் மாவட்டத்தில் நல்லூர் கிராமத்தில் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளன. மேலும் சேலம் மாவட்டத்தில் கோனேரிப்பட்டி என்ற கிராமத்தில் தானியங்கி பட்டு நூற்பகம் நிறுவிட சீனாவிலிருந்து இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு சென்னை துறைமுகத்தில் உள்ளன.

**8.11 தானியங்கி பட்டு நூற்பகத்திற்கு வழுங்கப்படும் மானிய உதவிகள் யாவை ?**

★ தானியங்கி பட்டு நூற்பாலை அமைத்திட திட்ட மதிப்பீடு சுமார் ரூ.280.00 இலட்சங்கள் ஆகும். இதில் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள் மதிப்பு ரூ.100.00 இலட்சங்கள் அகும். இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு மத்திய பட்டு வாரியம் ரூ.50.00. இலட்சமும், மாநில அரசு ரூ.15.00 இலட்சமும் மானியமாக வழுங்கப்பட்டு வருகிறது.

**8.12 தருமபுரி நகரில் பட்டு நூல் விற்பனை மையம் தொடங்குவதன் தேவை குறித்து.**

★ காஞ்சிபுரம் சரகத்தில் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சஙகங்கள் அதிகம் உள்ளன. எனவே, இச்சரகத்தில் பட்டு நூலின் கொள்முதலும் அதிகம். டான்சில்க், காஞ்சிபுரத்தில் பட்டு முறுக்காளர்களால் முறுக்கேற்றப்படும் பட்டு, பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சஙகத்திற்கு விற்பனை செய்யப்பட்ட உடன் அந்த தொகைக்கு பட்டு முறுக்காளர்கள் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் காஞ்சிபுரத்திற்கு சென்று கச்சாப்பட்டு நூலை ஏலத்தில் கொள்முதல் செய்கின்றனர். இதனால் பட்டு நூற்பாளர்களது பட்டு நூல்

உடனடியாக விற்பனை செய்யப்படுவதுடன் பட்டு நூற்பாளர்களுக்கு நல்லவிலையும் கிடைக்கின்றது.

★ ஆனால், தருமபுரி சரகத்தில் பட்டு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சஙகஙகள் ஏதுமில்லை. மேலும் பட்டு நூல் கொள்முதல் செய்யவும் எந்த முறுக்காளரும் தயாராக இல்லை. இதனால் காஞ்சிபுரத்தில் விற்பனை செய்யப்படும், பட்டு நூலின் விபரத்தை அறிந்த பின்னரே பட்டு முறுக்காளர்கள், கச்சாப்பட்டினை கொள்முதல் செய்ய வாய்ப்பிருக்கும். இதனால் கச்சாப்பட்டு நூல் கொள்முதல் செய்ய முறுக்காளர்கள் போட்டி இல்லாமல் மிகக் குறைந்த விலை கிடைப்பதுடன், விற்பனையிலும் தேக்கம் ஏற்படும்.

★ காஞ்சிபுரத்திலுள்ள அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்திற்கு பெறப்படும் அனைத்து கச்சாப்பட்டு நூலும் மத்திய பட்டு வாரியத்தால் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. பரிசோதனை செய்யப்பட்டு, பட்டின் தரம் நன்கு பரிசோதித்த பின்னரே பட்டு பரிமாற்றகத்தில் பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டு ஏலத்தில் விடப்படுகிறது. பட்டு நூலை முழுமையாக பரிசோதனை செய்ய போதிய வசதிகள் தருமபுரியில் தற்சமயம் இல்லை. இதனால் கச்சாப்பட்டு நூலின் தரத்தை தெளிவாக அறிய இயலாது.

★ தருமபுரி மாவட்டம் கர்நாடகா மாநிலத்தை ஒட்டியுள்ளது. அம்மாநிலத்தில் பட்டு நூல் விலையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் சுலபமாக தருமபுரி பகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும், கர்நாடகா மாநில கச்சாப்பட்டு நூல் சில நேரஙகளில் மிக அதிக அளவில் ஊடுருவி உள்ளூர் விற்பனைக்கு வர வாய்ப்புள்ளது. இதனால் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கச்சாப்பட்டு நூல் விற்பனை செய்யப்படுவதில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது.

★ தருமபுரியில் பட்டுநூல் விற்பனை மையம் தொடஙகப்பட்டால் அஙகு கொள்முதல் செய்யப்படும் பட்டு நூலுக்கான பட்டியல்கள் தலைமையகமான காஞ்சிபுரத்திற்கு கொண்டுவரப்பட்டு அவைகள் சம்மந்தப்பட்ட பதிவேடு மற்றும் ஆவணஙகளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு சரிபார்க்கப்பட்ட பின்னர் காசோலை தயார் செய்து அனுப்பி வைக்கப்படும். தற்சமயம் காஞ்சிபுரத்தில் பரிமாற்றகத்தில் கொள்முதல் செய்யப்படும் பட்டு நூலுக்கு அன்றைய தினமே

காசோலை வழஙகப்பட்டு வரப்படுகிறது. காசோலை வழஙகுவதில் ஏற்படும் காலதாமதத்தை நூற்பாளர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

★ கச்சாப்பட்டு நூலை கொள்முதல் செய்யும் பட்டு முறுக்காளர்கள் தருமபுரி சென்று நூலை கொள்முதல் செய்ய முன்வருவதில்லை. தருமபுரியில் கொள்முதல் செய்யப்படும் கச்சாப்பட்டு நூலை காஞ்சிபுரத்திற்கு எடுத்து வந்து அதற்கான போக்குவரத்துக் கட்டணத்தை கூடுதலாகச் சேர்த்துதான் விற்க நேரிடும். இதனால் முறுக்காளர்களுக்கு நஷ்டம் ஏற்படும். பட்டு கூட்டுறவு சஙகஙகள் தனியார் சந்தையின் விலையை அனுசரித்து டான்சில்க்கின் விலை அமைய வேண்டும் என வலியுறுத்தி வரும் நிலையில் போக்குவரத்துக் கட்டணத்தையும் சேர்த்துக் கூடுதலாக விலை வைத்து விற்க வேண்டிய நிலையில் அதிக விலை கொடுத்து வாஙக நெசவாளர் கூட்டுறவு சஙகஙகள் முன்வர விரும்புவதில்லை. எனவே, தருமபுரியில் தனியாக பட்டுநூல் கொள்முதல் மையம் தொடஙக வாய்ப்பு இல்லை.

**8.13 அ) "ஆரணி தொகுதி,ஆரணியில் பட்டுக்கூடுகளை இழைகளாக்கக் கூடிய ரீலிங சென்டர் அமைக்க அரசு முன் வருமா ? (ஆ) ஆம் எனில் எப்போது ?**

★ ஆம். ஆரணி தொகுதி உட்படதமிழகத்தில் பட்டுநூற்பு விரிவாக்கம் செய்ய வாய்ப்புள்ள அனைத்து பகுதிகளிலும் தனியார் பட்டு நூற்பு நிலையஙகள் துவக்கி செயல்படுத்துவதற்காக அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

★ (ஆ) தற்போது ஆரணி வட்டம், அத்திமலைப்பட்டு என்ற கிராமத்தில், திருமதி. G. நீலாவதி க.பெ.கணேசன் என்பவர் கிரியா ஊக்கி திட்டம் 2008–09ல் 10 ஏனஙகள் கொண்ட நவீன பலமுனை பட்டுநூற்பு மையத்தினை நிறுவி ஜீலை 2010 முதல் இயக்கி வருகிறார். இவர் 2011–2012 ஆம் ஆண்டில் 5501.200 கிலோ பட்டுக்கூடுகளை அஙகாடியில் கொள்முதல் செய்து , 658.800 கிலோ கச்சா பட்டு உற்பத்தி செய்துள்ளார். 2012–2013 ஆம் ஆண்டில் 2914.900 கிலோ பட்டுக்கூடுகளை கொள்முதல் செய்து , 361 கிலோ கச்சா பட்டு உற்பத்தி செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

★ ஆரணி பகுதியில் புதிய பட்டுநூற்பு நிலையங்கள் அமைத்து செயல்படுத்த முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு பட்டுநூற்பு பயிற்சி பட்டுவளர்ச்சித்துறையினால் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**எழக்கூடிய துணை வினா :**

**அ) ஆரணி பகுதியில் பட்டு முறுக்கேற்றும் இயந்திரங்கள் அமைப்பதற்கு அரசு முன்வருமா?**

★ ஆரணி வட்டம், அத்திமலைப்பட்டு கிராமத்தில் திருமதி G. நீலாவதி என்பவர் பட்டு முறுக்கேற்றும் இயந்திரங்கள் நிறுவி செயல்படுத்தி வருகிறார். இவருக்கு கிரியா ஊக்கி திட்டம் **2010–11**ன் கீழ் ரூ.**6.00** இலட்சம் மதிப்பிலான பட்டு முறுக்கேற்றும் இயந்திரங்கள் ரூ.**4.50** இலட்சம் அரசு மானிய உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

**8.14 மத்திய அரசின் 2013 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் இறக்குமதி செய்யப்படும் பட்டு நூலுக்கு சுஙகவரி 5 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது பட்டு நெசவாளர்களை பாதிக்குமா ?**

★ இறக்குமதி செய்யப்படும் பட்டு நூலுக்கு மார்ச் 2011 வரை 30 சதவீதமாக இருந்த சுஙகவரி 5 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. இதன் காரணமாக கிலோ ஒன்று ரூ. 358/– என வர்த்தகம் செய்ப்பட்ட இரு சுழற்சி இன கூடுகள் விலை குறைந்து, கிலோ ஒன்றுக்கு ரூ. 247/– ஆகவும், அதே போல் கிலோ ஒன்றுக்கு ரூ. 281/– என விற்பனை செய்யப்பட்ட கலப்பின மஞ்சள் கூடுகள் விலை குறைந்து ரூ. 162/– எனவும் விற்பனை செய்யப்பட்டது. பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்கள் தஙகளது எதிர்ப்பை அரசுக்கு தெரிவித்து, சுஙகவரி குறைப்பினை மறு பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை வைத்தனர்.

★ எனவே, பட்டுக்கூட்டின் விலையினை ஸ்திரப்படுத்திட குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்து மாநில அரசினால் பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசிடமிருந்து பதில் ஏதும் பெறப்படாத நிலையில், இந்த சுஙகவரி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ இறக்குமதி செய்யப்படும் சீன பட்டு நூல் வார்ப்பு ஆக பயன்படுத்தப்பட்டு வருகிறது. சராசரியாக ஒரு பட்டு சேலை தயாரிப்புக்கு 300 கிராம் அளவுக்கு வார்ப்பு தேவைப்படுகிறது. தற்போது சீன பட்டு கிலோ ஒன்று $ 55.00 (ரூ. 2985/–) என்ற மதிப்பில் கொள்முதல் செய்யப்படுவதால், சுஙகவரி உயர்வினால் சுமார் ரூ. 90/– மட்டுமே கூடுதலாக செலவினம் செய்ய வாய்ப்பு உள்ளது.

★ எனவே, இந்த சுஙகவரி உயர்வினால் சீனப் பட்டு நூல் இறக்குமதி குறைய வாய்ப்பு ஏற்பட்டு, உள்நாட்டு கச்சாப்பட்டு நூல் நுகர்வு அதிகரிக்கும். எனவே பட்டு விவசாயி மற்றும் நூற்பாளர் மற்றும் முறுக்காளர் நலன் பாதுகாப்பது மட்டுமின்றி பட்டு நெசவாளர் நலன் எந்த விதத்திலும் பாதிக்காது.

# 9. அரசு பட்டுப் பண்ணைகள்

## 9.1 தமிழ்நாட்டில் பட்டு விதைப் பண்ணைகள் எங்கு செயல்படுகின்றன ?

★ தமிழ்நாட்டில் பட்டு முட்டைகள் உற்பத்திக்கு தேவையான நாட்டின மற்றும் அயலின விதைக் கூடுகள் உற்பத்தி செய்வதற்கு கீழ்காணும் இடஙகளில் 19 அரசு பட்டு விதைப் பண்ணைகள் செயல்படுகின்றன.

| வ. எண் | மாவட்டம் | உதவி இயக்குநரின் தலைமையிடம் | விதைப் பண்ணையின் பெயர் | |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | பேரிகை | பி3 |
| 2 | | | ஆவலப்பள்ளி | பி3 |
| 3 | | | ஒசூர் | பி2 |
| 4 | | கல்கொண்டப்பள்ளி | கல்கொண்டப்பள்ளி | பி3 |
| 5 | | | தளி | பி3 |
| 6 | | உத்தனப்பள்ளி | உத்தனப்பள்ளி | பி2 |
| 7 | | | உளிமஙகலம் | பி2 |
| 8 | | | மேலகிரி | பி1 |
| 9 | | கோலட்டி | கோலட்டி | பி1 |
| 10 | சேலம் | சேலம் | ஏற்காடு | பி2 |
| 11 | ஈரோடு | தாளவாடி | ஆசனூர் | பி2 |
| 12 | | மாதஹள்ளி | மாதஹள்ளி | பி1 |
| 13 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | அத்தனாவூர் | பி1 |
| 14 | நாமக்கல் | நாமக்கல் | கொல்லிமலை | பி1 |
| 15 | தேனி | தேனி | மயிலாடும்பாறை | பி2 |
| 16 | திருநெல்வேலி | தென்காசி | செஙகோட்டை | பி1 |
| 17 | நீலகிரி | குன்னூர் | குன்னூர் | பி3 |
| 18 | | | மசினக்குடி | பி2 |
| 19 | | | மசக்கல் | பி2 |

## 9.2 தமிழ்நாட்டில் பட்டு விவசாயிகளுக்கு அரசு பட்டுப் பண்ணைகள் எவ்வகையில் உதவுகின்றன ?

★ தமிழ்நாட்டில் பட்டு விவசாயிகளுக்கு தேவையான மல்பரி நாற்றுகள் உற்பத்தி, இளம்புழு விநியோகம், பட்டு தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி மற்றும் பட்டுக்கூடுகள் உற்பத்தி முதலிய பணிகள் மேற்கொள்வதற்காக விவசாயி பயிற்சி மையங்கள், செயல்விளக்க பயிற்சி மையங்கள், இளம்புழுவளர்ப்பு பண்ணைகள், மாதிரி பட்டுப் பண்ணைகள் ஆகிய அரசு பட்டுப் பண்ணைகள் கீழ்காணும் இடங்களில் செயல்படுகின்றன.

| வ. எண் | மாவட்டம் | உதவி இயக்குநரின் தலைமையிடம் | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஒசூர் | ஒசூர் | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 2 | | கிருஷ்ணகிரி | ஊத்தங்கரை | கலப்பின பட்டுப்பண்ணை |
| 3 | தருமபுரி | தருமபுரி | சித்தேரி | கலப்பின பட்டுப்பண்ணை |
| 4 | | | சோகத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 5 | சேலம் | சேலம் | நத்தக்கரை | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 6 | | | மணியார்குண்டம் | கலப்பின பட்டுப்பண்ணை |
| 7 | | | புதூர் | கலப்பின பட்டுப்பண்ணை |
| 8 | விழுப்புரம் | | வெள்ளிமலை | கலப்பின பட்டுப்பண்ணை |
| 9 | ஈரோடு | தாளவாடி | தாளவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 10 | | | கேர்மாளம் | கலப்பின பட்டுப்பண்ணை |
| 11 | திருப்பூர் | உடுமலைப் பேட்டை | மைவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 12 | காஞ்சீபுரம் | வாணியம்பாடி | விச்சந்தாங்கல் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 13 | கடலூர் | விழுப்புரம் | நெய்வேலி | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 14 | வேலூர் | வாணியம்பாடி | மின்னூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 15 | திருச்சி | திருச்சி | உப்பிலியாபுரம் | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 16 | | | கலிஙகம்பட்டி | மாதிரி பட்டுப்பண்ணை |
| 17 | | | கருக்கமடை | மாதிரி பட்டுப்பண்ணை |
| 18 | | | பச்சைமலை | கலப்பின பட்டுப்பண்ணை |
| 19 | | | மணிகண்டம் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 20 | தஞ்சாவூர் | | நாஞ்சிக் கோட்டை | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 21 | திண்டுக்கல் | திண்டுக்கல் | சி.கே.புதூர் | மாதிரி பட்டுப்பண்ணை |
| 22 | சிவகஙகை | | குன்றக்குடி | மாதிரி பட்டுப்பண்ணை |
| 23 | | | ஓ.புதூர் | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 24 | ராமநாதபுரம் | தேனி | பாண்டியூர் | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 25 | திருநெல் வேலி | தென்காசி | திருநெல்வேலி | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 26 | விருதுநகர் | | ஸ்ரீவில்லிபுத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 27 | விருதுநகர் | | செவலூர் | மாதிரி பட்டுப்பண்ணை |
| 28 | கன்னியா குமரி | | நாகர்கோவில்/ கோணம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |

**9.3 தளி தொகுதி கோலட்டி ஊராட்சியில் உள்ள அரசு பட்டுப் பண்ணையில் பட்டு நூல் தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா ?**

★ கோலட்டி ஊராட்சியில் உள்ள கோலட்டியில், பட்டு வளர்ச்சித்துறையின் கீழ் அரசு பட்டுப் பண்ணை ஒன்று செயல்பட்டு வருகின்றது. இப்பண்ணையினை சுற்றிலும் வனப் பகுதியாக உள்ளதாலும், வன விலங்குகள் அடிக்கடி பண்ணையில் புகுந்து சேதம் ஏற்படுத்துவதாலும், போதிய நீர் ஆதார வசதிகள் இல்லாததாலும் தற்பொழுது சுமார் 24.00 ஏக்கர் அளவில் மட்டுமே மல்பரி தோட்டம் பயிரிடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றது.

★ இப்பண்ணையில் பயிரிடப்பட்டுள்ள மல்பரி இலைகளை பயன்படுத்தி விதை முட்டைகள் பல்வேறு தரக்கட்டுப்பாட்டு அளவுகளின் அடிப்படையில் வளர்ப்பு செய்து, உள்நாட்டின விதைக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

★ விதைக்கூடுகள் பட்டு முட்டை தயாரிக்கப்படும் வித்தகங்களுக்கு அனுப்பப்பட்டு, அதிலிருந்து வெளிவரும் தாய்ப்பூச்சிகள் மூலம் விவசாயிகளுக்கு நூற்பு பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யவதற்கென வழஙகுவதற்கு பட்டு முட்டைகள் தயாரிக்கப்படுகின்றன.

★ ஒவ்வோர் ஆண்டும் விவசாயிகளுக்கு வழஙகுவதற்கு தேவையான அளவு பட்டு முட்டைகள் கணக்கிடப்பட்டு, விதைக்கூடுகள் உற்பத்தி செய்ய தேவையான எண்ணிக்கையில் கோலட்டி அரசு பட்டுப் பண்ணையில் விதை முட்டைகள் திட்டமிட்டு வளர்க்கப்படுகின்றன. இந்த விதைக் கூடுகள் தாய்ப்பூச்சிகள் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுவதால் நூற்புக்கு அனுப்ப முடியாது.

★ மேலும் பட்டுநூற்புக்காக அதிக அளவில் நூற்பு பட்டுக்கூடுகள் கோலட்டி அரசு பட்டுப் பண்ணையில் உற்பத்தி செய்தால், விதைக்கூடுகளின் தரமும், பாரம்பரிய பண்புகளும் பாதிக்கப்படுவதுடன், நூற்பு பட்டுக்கூடுகளில் உள்ள நோய்க்கிருமித் தாக்குதலில் உள்நாட்டின விதைக்கூடுகளின் உற்பத்தியும் தரமும் பாதிக்கப்படும்.

★ ஆகவே விதைக் கூடுகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படும் இப்பண்ணையில் பட்டு நூற்பு தொழிற்சாலையினை அமைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

D:\y2k13\Mar\pls\LAQ-latest\FAQs_Sericulture-final.doc cos4